# தமிழ் இலக்கியங்களில்

## சமயமும் சமூகமும்

தொகுதி – III




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் சந்திரிகா

திரு. சண்முகம் சரவணன்

முனைவர் சு. இராமலிங்கம்

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. முருகேசன்**
**முனைவர் மா. சிதம்பரம்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் சந்திரிகா**
**திரு. சண்முகம் சரவணன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : நவம்பர், 2018

வெளியீடு : **தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 9843273994, 7358863327

பக்கங்கள் : XXII + 454 = 476

விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 92 - 9**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


Editor's : **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**
**Dr. S. Kumaran. Dr. Chandrika**
**Mr. Shanmugam Saravanan**
**Dr. S. Ramalingam**

Copyright's : Editors

First Edition : November, 2018

Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : XXII + 454 = 476

Prize : **Rs. 400/-**

190. **செ. விஜய்** 983
பௌத்த தமிழிலக்கியங்களின் வரலாற்று முக்கியத்துவம்

191. **அருட்சகோதரி பி. சகாய மேரி** 989
விவிலியமும் அற இலக்கியமும் - ஓர் ஒப்பீடு

192. **ம. சுந்தரி** 994
திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் தல வரலாறு

193. **சி. அன்பரசி** 999
பிற்காலச் சோழர்காலத்தில் தோன்றிய காப்பியங்கள்

194. **ப. தீபா** 1005
பல்லவ வரலாற்றுக்குத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பு

195. **பா. ஜெயஸ்ரீ** 1009
பல்லவர் காலமும் சைவ சமயமும்

196. **முனைவர் துரை. பாரதிதாசன்** 1014
திருக்கோயில்களில் வழிபாட்டு முறைகளும் விழாக்களும்

197. **முனைவர் வெ. சுகந்தா** 1018
வைணவத்தின் ஏற்றத்தில் ஸ்ரீ இராமானுஜரின் பங்களிப்பு

198. **மா. மோகனவள்ளி** 1024
பதிற்றுப்பத்தில் தமிழர் பண்பாடு

199. **பெ. விஜயலட்சுமி** 1031
சங்ககாலச் சமூகமும் வாழ்வியலும்

200. **முனைவர் அ. பிரியா** 1035
சங்ககாலக் கல்வி

201. **கை. ப. இராஜேஸ்வரி** 1038
தொல்காப்பியத்தில் அகத்திணை நெறிமுறைகள்

202. **மு. கலைசெல்வி** 1042
தலபுராணம்

203. **பி. மைக்கேல் சைனி** 1045
சிலப்பதிகாரத்தில் இயற்கை வழிபாடு

204. **முருகன். ஆ., மற்றும் மகேஷ், ஆ.** 1049
நாட்டார் தெய்வ வழிபாட்டுக் கூறுகள்

205. **கவியரசன், மு.,** 1055
சமூகத்தினை அலசிய மையங்கள்

# 197. வைணவத்தின் ஏற்றத்தில் ஸ்ரீ இராமானுஜரின் பங்களிப்பு

**முனைவர் வெ. சுகந்தா**
*இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

பிறப்பினால் தீர்மானிக்கப்பட்ட சாதி வேற்றுமைகளை மறுத்து, பக்தியையும் ஞானத்தையும் நல்லொழுக்கத்தையும் வலியுறுத்தியப் பேராசான் ஸ்ரீ இராமானுஜர். மக்கள் அனைவரையும் சமத்துவக் கண்ணோட்டத்தோடு நோக்கியது மட்டுமல்லாமல், எளியவர்களும் பரம்பொருளை அடைவதற்கான எளிய மார்க்கத்தைக் காட்டியருளியவர். இறைவனாகிய முழுமுதற் பொருளை வணங்குவர்களுக்கு மட்டுமல்லாது இறை அடியார்களைத் தொழுது அவர்களுக்கான பணிவிடைகளைச் செய்தும் இறையருளைப் பெற முடியும் என்பதற்கான மனித குல ஆதாரமாகத் திகழ்ந்தவர்.

## வாழ்க்கை - சிறு குறிப்பு

இராமனின் தம்பி இலட்சுமணனைப் போல் அழகாக இருந்தமையால் தந்தையால் "இளையாழ்வார்" எனப் பெயர் சூட்டப்பட்டவர் ராமானுஜர் அனந்தனின் மறு அவதாரமாகக் கருதப்பட்டவராவார். அனுஜன் என்றால் வடமொழியில் இளையவன் என்று பொருள். இராமனுக்கு இளையவரான இலட்சுமணின் அம்சமாகப் பிறந்ததால் இராமானுஜர் என்று அழைக்கப்பட்டார். இப்பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது. மேலும் இவருக்கு யதிராஜர் என்ற பெரும் உண்டு. யதி என்றால் சன்னியாசி என்றும் ராஜா என்றால் தலைமைப் பண்புமிக்கவர் என்றும் பொருளாகும். திருவரங்கத்தில் அணியரங்கன் சூட்டிய பெயர் உடையவர் என்பதாகும். திருக்கோட்டியூர் நம்பியால் சூட்டப்பட்ட பெயர் எம்பெருமானார். ஆண்டாளின் திருவுள்ள அவாவினைப் பூர்த்தி செய்தமையால் நாச்சியார் அருளிய பெயர் திருப்பாவை ஜுயர் ஆகும். ஸ்ரீ பாஷ்யத்தைப் பூர்த்தி செய்தவுடன் சாரதா பீடத்தில் சரஸ்வதியால் சார்த்தப்பட்ட பெயர் ஸ்ரீபாஷ்யக்காரன் என்பதாகும்.

மஹா ஆச்சார்யரான சுவாமி ஆளவந்தாரால் "**ஆம் முதல்வன் இவன்**" என குருவால் கண்டறியப்பட்டவராவார். பின்பு ஆளவந்தாரைச் சந்திக்க திருவரங்கம் சென்றார். அவரைக் காணமுடியாமல் அவரது மரணத்தில் சரம திருமேனியைத் தரிசித்து